Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
STC No. 125 /2023

# Deposition of P.W.3

| | | |
|---|---|---|
| Name | : | சிவகுமார் |
| Father's Name | : | சொக்கன் |
| Village | : | வடகாடு |
| Religion | : | இந்து |
| Age | : | **52/2024** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 25.10.2024**
(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர். )

**முதல்விசாரணை**

நான் வடகாடு கிராமத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.**1** வீரமுத்து என்பவரையும் தெரியும். அவர்கள் இருவரும் பக்கத்து பக்கத்து வீட்டில் வசித்து வருகிறார்கள். **2023**ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒருநாள் காலை சுமார் **11.00 -12.00** மணிப்போல நான் என் வீட்டில் இருந்தபோது கடைவீதியிலிருந்து வந்த ஒரு பையன் என்னிடம் எதிரி வீரமுத்துவும், அ.சா.**1** வீரமுத்துவும் சண்டை போட்டுக்கொண்டிருப்பதாக தகவல் சொன்னான். நான் உடனே அ.சா.**1** வீரமுத்து வீட்டிற்கு சென்று பார்த்தேன். அப்போது எதிரி வீரமுத்து அ.சா.**1** வீரமுத்துவை கம்பால் அவரது உடம்பில் அடித்துக்கொண்டிருந்தார். அதனை பார்த்து நான் எதிரி வீரமுத்துவிடம் கேட்டேன். அடிபட்ட அ.சா.**1** வீரமுத்து மயங்கி விழுந்துவிட்டார். அவருக்கு நான் தண்ணீர் கொடுத்தேன். எழுந்த அ.சா.**1** வீரமுத்து நேராக வடகாடு காவல்நிலையத்திற்கு சென்றார். நானும் அ.சா.**1** வீரமுத்துவின் மனையும் உடன் சென்றோம். காவல் நிலையத்திற்கு போன அ.சா.**1** வீரமுத்து காவல் நிலையத்திற்கு வெளியில் வைத்து மயக்கம்போட்டு விழுந்துவிட்டார். அங்கிருந்து அவரை **108** ஆம்புலன்ஸ் மூலம் ஆலங்குடி மருத்துவமனைக்கு அவரது மனைவி கொண்டு சென்றார். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

அ.சா.1 வீரமுத்துவும், எதிரி வீரமுத்துவும் பங்காளிகள் ஆவார்கள். அ.சா.1 வீரமுத்து எனது உடன்பிறந்த அக்காவின் கணவர் ஆவார். எதிரி வீரமுத்துவின் அண்ணன் பெயர் ராஜமாணிக்கம். அ.சா.1 வீரமுத்துவிற்கும் அவரது அண்ணன் ராஜமாணிக்கத்திற்கும்

இடையே சொத்து பாகபிரிவினை நடக்கவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அ.சா.1 வீரமுத்துவிற்கும், எதிரி வீரமுத்துவிற்கும் இடையே வழக்கு சம்பவத்திற்கு முன்பு என்ன பிரச்சனை இருந்தது என்றால் இடம் தொடர்பான பிரச்சனை இருந்தது. எதிரியின் அண்ணன் ராஜமாணிக்கத்திடமிருந்து அ.சா.1 வீரமுத்து இடத்தினை கிரயம் பெற்றதாக கூறி எதிரியின் அனுபவத்தை தடுத்ததால்தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். எதிரி தனது வீட்டின் அருகில் வாழைக்கன்று வைத்து அனுபவம் செய்ததை அ.சா.1 வீரமுத்து ஜே.சி.பி இயந்திரத்தை கொண்டு சென்று அத்துமீறி எதிரி வைத்திருந்த வாழைமரத்தை வெட்டி அப்புறபடுத்தும்போது எதிரி சென்று தடுத்ததால்தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் அ.சா.1 வீரமுத்துவின் இடத்தில்தான் எதிரி வீரமுத்து வாழைக்கன்று நட்டு வைத்திருந்தார். அதனால்தான் பிரச்சனை ஏற்பட்டது. அ.சா.1 வீரமுத்துவுடன் நான் காவல் நிலையம் சென்றிருந்தபோது நடந்த விவரங்களை போலிசாரிடம் அ.சா.1 வீரமுத்து சொல்லவில்லை, நான்தான் சொன்னேன் என்றால் சரிதான். நான் சம்பவத்தை கேள்விப்பட்டதாகவும், பின்னர் சம்பவ இடம் சென்றபோது அ.சா.1 வீரமுத்துவை எதிரி வீரமுத்து கம்பால் உடம்பில் அடித்துக்கொண்டிருந்தார் என்றும், அதனை நான் பார்த்ததாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அ.சா.1 வீரமுத்து கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>ம.வி.இல்லை</u>